# SAMMANTHURAI PRADESHIYA SHABHA

# PERFORMANCE REPORT




# 2023

**Tel: 067 2260043**

**Fax: 067 2260235**

**E-mail: strps2009@yahoo.com**

Scanned with CamScanner

# 2023 ஆண்டுக்கான வருடாந்தச் செயற்றிறன் அறிக்கை

## சம்மாந்துறை பிரதேச சபை

## கிழக்கு மாகாணம்

உள்ளடக்கம்


அத்தியாயம் 01 - நிறுவன விவரக்குறிப்பு / நிறைவேற்றுப் பொழிப்பு

அத்தியாயம் 02 - முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

அத்தியாயம் 03 - ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயற்றிறன்

அத்தியாயம் 04 - செயற்றிறன் குறிகாட்டிகள்

அத்தியாயம் 05 - நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களை (SDG) அடைந்துகொள்தல் பற்றிய செயற்றிறன்

அத்தியாயம் 06 - மனித வள விவரக்குறிப்பு

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை




Scanned with CamScanner

அத்தியாயம் 01

நிறுவன விவரக்குறிப்பு / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1. அறிமுகம் - இணைப்பு 01

1.2. நிறுவனத்தின் தூரநோக்கு, பணிநோக்கு, நோக்கங்கள் - இணைப்பு 02

1.3. பிரதான தொழிற்பாடுகள் - இணைப்பு 03

1.4. நிறுவன வரைபடம் - இணைப்பு 04

1.5. வெளிநாட்டு நிதியீட்டக் கருத்திட்டங்களின் விபரங்கள் - LDSP

அ. கருத்திட்டத்தின் பெயர் - Roofing Improvement of existing compose yard and purchasing of pelletizing machine

ஆ. நன்கொடை முகவராண்மை – World Bank, EU

இ. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – சுமார் 38 மில்லியன்

ஈ. கருத்திட்டக் காலப்பகுதி - 02 Year (2022/2023)



Scanned with CamScanner

## இணைப்பு – 01

### சம்மாந்துறை பிரதேச சபை அறிமுகம்

### சம்மாந்துறை உள்ளூராட்சி வரலாறு

இலங்கை வரலாற்றில் உள்ளூர் நிருவாகங்கள், மன்னர்களாலும் ஐரோப்பியர்களாலும் பற்பல நிருவாக அலகுகளால் பரிபாலிக்கப்பட்டுள்ளமையை அறிவோம். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில், 1915ஆம் ஆண்டளவில்தான் "வன்னியா நிருவாகம்" என்ற அமைப்பு முறையொன்று தோற்றுவிக்கப்பட்டது. இவ்வமைப்பு பரந்த பிரதேசத்தை உள்ளடக்கியதாக இருந்தபடியால், கட்டுப்படுத்தப்பட்ட ஒரு எல்லையை மையமாகக் கொண்ட உள்ளூராட்சி (LOCAL BOARD) அமைப்பு முறையொன்று ஏற்படுத்தப்பட்டது. அரசாங்க அதிபர் (GA) காரியாலயம்(கச்சேரி) மட்டக்களப்பில் இயங்கியபடியால் மக்களின் அன்றாட பணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக 1925ஆம் ஆண்டளவில் "சுகாதார சபைகள்"(SANITARY BOARD) தேசாதிபதியால் நியமிக்கப்பட்டது. இச்சபைகள் மக்களால் தெரிவு செய்யப்படாமல் உள்ளூர் பிரமுகர்களைக் கொண்டதாக தேசாதிபதியால் தெரிவு செய்யப்பட்டனர். வன்னியார், சமயதலங்களின் சிபாரிசுகளுக்கமைய இத்தெரிவு நடைபெற்றுள்ளது. ஆரம்பத்தில் இச்சுகாதார சபை மூன்று பேர்களைக் கொண்டதாக இருந்துள்ளது. இச்சபை தெருக்களையும், பாதைகளையும் துப்பரவாக வைத்திருத்தல், சிறு பாலங்கள் அமைத்தல்,இரவு காலங்களில் தெருவிளக்குகளை ஏற்றி மக்களின் நடமாட்டத்துக்காக உதவி புரிதல், நுளம்புத் தொல்லைகளிலிருந்து மக்களை காப்பாற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற சுகாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரங்கள் இச்சுகாதார சபைக்கு வழங்கப்பட்டிருந்தன.

1931ஆம் ஆண்டின் பிரிட்டிஷ்சாரின் "டொனமூர்" சட்ட சீர்திருத்தங்களின் மூலம் இச்சபைகளுக்கு அதிகாரங்கள் கூடுதலாக வழங்கப்பட்டதுடன் இச்சபையின் அங்கத்தவர் தொகையும் ஐந்தாக உயர்த்தப்பட்டன. இச்சபைகளின் நடவடிக்கைகளுக்காக தேவையான நிதியை மட்டக்களப்பு கச்சேரியினால் ஒதுக்கப்பட்டதாகவும் அறிகின்றோம். எனவே, சுகாதார சபைகள் மக்களிடமிருந்து எந்த விதமான வரிகளையும் அறவிடாமல், அரசாங்கத்தின் நிதி மூலமே மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். இச்சபையில் முகம்மது உடையார் முகைதீன்பாவா போடி, கலந்தர்லெவ்வை முகம்மதலியார் போடி, அபீப் முகம்மதுப் போடி (ஐப்போடி), உதுமாலெவ்வைப்போடி, கோஸ்முகம்மதுப்போடி போன்றவர்கள் கடமையாற்றியதாகவும் அறிகின்றோம்.

### பட்டின சபை

1947ஆம் ஆண்டின் சோல்பரி அரசியல் யாப்பில் சீர்திருத்தப்படி இலங்கையின் சுதந்திரத்திற்கு வழிவகுத்தது. அதன் பிரகாரம் தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டன. அத்துடன் உள்ளூராட்சி சபைகளும் அமைக்கப்பட்டன. சம்மாந்துறை, கல்முனைத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டது. உள்ளூராட்சி சபைகளான கிராம சபை, பட்டின சபை, நகரசபை, மாநகர சபை என்று நிர்ணயிக்கப்பட்டன. அந்த வகையில் கல்முனை, சம்மாந்துறை மாத்திரம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள (இன்றைய அம்பாரை மாவட்டத்திலுள்ள) பட்டின சபைகளாக இயங்கின.

1947ஆம் ஆண்டின் நடைபெற்ற சம்மாந்துறை பட்டின சபைக்கான தேர்தல் ஐந்து வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பட்டின சபையின் முதல் தலைவராக ஜனாப் யூ.எம். சுலைமாலெவ்வையும், திரு. நு.பொன்னையா உப-தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் உறுப்பினர்களாக ஜனாப். எம்.பி. முகம்மது இஸ்மாயில் (லோட்மேன்) ஜனாப். பக்கீர் முகையதீன் போடியார், ஜனாப். எம்.ஏ. அப்துல் காதர் (சந்தனம் வ.வி) தெரிவாகினர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பட்டின சபையாகத் தெரிவு செய்யப்பட்டதும் சோலைவரி அறவிடவும், சந்தையைக் குத்தகைக்கு விடவும் அதிகாரம் கொண்ட சபையாக விளங்கியமையால் அதன் மூலம் கிடைக்கும் வருமானங்களும், அரசாங்க மானியங்களும் சபையை நடாத்திச் செல்ல உதவியதென்றால் மிகையாகாது.

1950ஆம் ஆண்டு நடைபெற்ற பட்டின சபைத் தேர்தலில் ஜனாப். எம்.யூ. உதுமாலெவ்வை முன்னாள் காழியார் தலைவரானார். பட்டின சபைக்கு சொந்தக் காரியாலயம் இல்லாதபடியால் இவ்விருவர் கலங்களிலும் வெவ்வேறு இடங்களில் தனியார் இல்லங்களில் இக்காரியாலயம் நடைபெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது. முக்குவர் வட்டையில் இருந்த தோம்புதோர் வளவிலும், அதனைத் தொடர்ந்து தம்பிநாதப்பிள்ளை உடையார் வளவிலும், இதனைத் தொடர்ந்து சுபைர் காரியப்பர் கிட்டங்கிலும் கடைசியாக நீதிமன்றத்திற்கு முன்பாகவுள்ள அப்துல் மஜீத் அமைச்சர் வளவிலுமாக பட்டின சபை நடவடிக்கைகள் நடைபெற்று வந்தன.



Scanned with CamScanner

அப்போதய பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப். ஏ.எம். மேர்சா அவர்களின் அயராத முயற்சியின் பயனாக 1954.08.28ஆம் திகதியில் ஏ.எம். மேர்சா அவர்களால் பட்டின சபையின் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. அப்போது பட்டின சபையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள்:-

1. ஜனாப் எம்.ஐ. அப்துல் லத்தீப் (தலைவர்)
2. ஜனாப் ஏ. ஆதம்லெவ்வை (உபதலைவர்-எஸ்.ஆர்)
3. ஜனாப் எம்.ஏ. அப்துல் காதர் சந்தனம் (வ.வி)
4. ஜனாப் எஸ். ஆதம்பாவா நூலச்சியர் பரிகாரி
5. திரு. கே. மாணிக்கம்
6. திரு. ரீ. சபாநாயகம்

புதிய பட்டின சபைக் காரியாலயம் இயங்கத் தொடங்கியபோது அதன் செயலாளராக திரு. கே. கணபதிப்பிள்ளை அவர்கள் கடமையாற்றினார்கள். இக்கட்டத்தின் ஒப்பந்தக்காரராக ஏ.எச். அச்சி முகம்மது (அச்சிப் போடியார்) அவர்கள் இருந்து மிகச் சிறந்த முறையில் பட்டின சபைக் காரியாலயத்தை கட்டிக் கொடுத்த வகையால் பலரதும் பாராட்டைப் பெற்றிருந்தார்.

இவர்களைத் தொடர்ந்து எம்.ஏ. அப்துல் மஜீத் (முன்னாள் அமைச்சர்) எம்.ஏ. அமீர் அலி, எம். இஸட். கமால் காரியப்பர், யூ.எல்.எம். முகைதீன் (சட்டத்தரணி), ஐ.எம். இப்றாஹீம், எம்.ஐ.எம். மன்சூர், ஏ.எம்.எம் நௌஷாட் ஆகியோர் தலைவராகக் கடமையாற்றியுள்ளனர். அதன் பின்னர் தற்போது எம்.ஐ.கே.முஹம்மட் அவர்கள் செயலாளராக கடமையாற்றி வருகின்றார்.

அப்போதய பட்டின சபையின் கிழக்கு எல்லையாக நெல்லுப்புடி ஆறும், மேற்கு எல்லையாக வீரமுனையும், தெற்கு அலிவன்னனியர் வீதியும், வடக்கு அலவக்கரையும் உள்ளடக்கிய பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருந்தன. பட்டின சபை பிரதேச சபையாக மாற்றமடைந்த வரலாற்றை கிராம சபைத் தலைப்பில் பார்போம்.

## கிராம சபை

சோல்பரி அரசியல் யாப்பின் பிரகாரம் அமைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளில் ஒன்றான கிராம சபையின் தோற்றம் சம்மாந்துறையில் எவ்வாறு அமையப்பெற்றது என்பதைப் பார்போம். கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சம்மாந்துறையின் கருவாட்டுக்கல், ஜே புளக் போன்ற பிரதேசங்கள் அபிவிருத்தி அடையத் தொடங்கின. இதனால் இப்பகுதிகள் ஆற்றுப்பள்ளத்தாக்கு சபையின் கீழ் பராமரிக்கப்பட்டு வந்தன. மக்கள் பிரதி நிதிகள் இச்சபையில் இடம் பெறவில்லை. 1965ஆம் ஆண்டுக்குப் பிறகு சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு (தற்போதய DS பிரிவு) இறக்காமம் கிராம சபை, நாவிதன்வெளி கிராம சபை இச்சபையில் கருவாட்டுக்கல்,ஜே புளக் பகுதி, மல்வத்தை அமைந்திருந்தன.

1968ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சபைகளின் மீள் எல்லைப் பிரிவுகளின் பிரகாரம் நாவிதன்வெளி, மல்வத்தை, சம்மாந்துறை என மூன்று கிராம சபைகளாக அமையப் பெற்றன. இதன் மூலம் சம்மாந்துறை ஒரு பட்டின சபையாகவும், ஒரு கிராம சபையகவும், செயற்படத் தொடங்கின. சம்மாந்துறை கிராம சபையில் கருவாட்டுக்கல் பிரதேசம்,“ஜே” புளக் கிழக்கு, மேற்கு, மலையடிக்கிராமம், கல்லரச்சல், செந்நெல் கிராமம் என்பன அடங்கலாயின.

## பிரதேச சபைகள்

1988.10.01ஆம் திகதி முதல் பிரதேச சபைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதனால் உள்ளூராட்சி நிருவாக அமைப்பில் மாற்றங்கள் ஏற்படலாயின. பட்டின சபை முறை முற்றாக நீக்கப்பட்டு, கிராம சபையும் நீக்கப்பட்டு, பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை என மூன்று பிரிவுகளாக்கப்பட்டன. சம்மாந்துறை பட்டின சபை நகர நகர சபையாக உயர்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பட்டின சபை அந்தஸ்து குறைக்கப்பட்டு பிரதேச சபையாக இயங்கத் தொடங்கியது. இவ் ஒவ்வொரு பிரதேச செயலகமும் ஒரு பிரதேச சபை என்ற திட்டத்தால் சம்மாந்துறை பட்டின சபை, நாவிதன்வெளிக் கிராம சபை, மல்வெத்தைக் கிராம சபை, இறக்காமம் கிராம சபை, சம்மாந்துறை கிராம சபை ஆகிய ஐந்து தனித்தனி உள்ளூராட்சி சபைகளும் இணைந்ததான “சம்மாந்துறை பிரதேச சபையாக” நடைபெறலாயிற்று. சம்மாந்துறை பட்டின சபைக் காரியாலயம் பிரதேச சபைக் காரியாலமாக இயங்கத் தொடங்கியது. ஏனைய நான்கு கிராம சபைக் காரியாலயங்களும் உப பிரதேசக் காரியாலயங்களாகப் செயற்பட்டன.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக 1977ஆம் ஆண்டு தொடக்கம் 1994 வரை வடகிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறவில்லை. தேர்தல்கள் அறிவிக்கப்பட்டும் வேட்பு மனுக்கள் சமர்பிக்கப்பட்டும் தேர்தல் பிரச்சாரங்கள் நடைபெற்றும் இறுதிக்கட்டத்தில் பலமுறை தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. கடைசியாக 1994.03.01இல் சம்மாந்துறைக்கான பிரதேச சபைத் தேர்தல் நடைபெற்று சட்டத்தரணி யூ.எல்.எம். முகைடீன் அவர்கள் தவிசாளராகவும், அல்ஹாஜ் ஐ.எம். இப்றாஹீம் அவர்கள் உப தவிசாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். சட்டத்தரணி யூ.எல்.எம். முகைடீன் அவர்கள் MP ஆக தெரிவு செய்யப்பட்டதும் ஐ.எம். இப்றாஹீம் அவர்கள்



Scanned with CamScanner

தவிசாளராக கடமையாற்றினார். இக்காலத்தில் பற்பல அபிவிருத்திப் பணிகள் நடைபெற்றன. முக்கியமாக குடிநீர்ப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டமை முக்கியமானதாகும்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பிரதேச சபைத் தேர்தலில் ஜனாப் எம்.ஐ.எம். மன்சூர் அவர்கள் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். இதன் பின்னர் 2011.03.17ஆம் திகதி நடைபெற்ற பிரதேச சபைத் தேர்தலில் தற்போதய தவிசாளர் அல்ஹாஜ் ஏ.எம்.எம். நௌசாட் தெரிவாகி 2023.10.01 வரை தவிசாளராக கடமையாற்றி வந்தார். அதனைத் தொடர்ந்து 2023.02.14 ஆம் திகதி தொடக்கம் 2023.03.19 ஆம் திகதி வரை மாஹிர் அவர்கள் தவிசாளராக கடமையாற்றி இருந்தார். தற்போது, 2023.03.20 ஆம் திகதி தொடக்கம் இற்றை வரை செயலாளர் M.A.K.முஹம்மட் தவிசாளரின் கடமையினையும் ஆற்றி வருகின்றார்.

தற்போது இறக்காமம், நாவிதன்வெளி என்பன தனித்தனி பிரதேச செயலகங்களாக செயற்படுவதால், சம்மாந்துறையின் பிரதேச சபையின் எல்லைக்குள் சுருங்கி விட்டது எனலாம்.

## புதிய பிரதேச சபைக் கட்டடம்

1954ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த பட்டின சபைக் கட்டடம் பின்பு பிரதேச சபைக் கட்டடமாக இயங்கி வந்தது. சுமார் 60 வருடங்கள் பழமை வாய்ந்த இக்கட்டடம் இன்றைய நவீன வசதி கொண்ட நிருவாக அமைப்புக்கு அமைந்ததாக இல்லாத காரணதால் புதிய கட்டடத்தின் தேவை உணரப்பட்டது. தவிசாளர் அல்ஹாஜ் ஏ.எம்.எம். நௌசாட் அவர்களின் அயராத முயற்சியினாலும் பிரதேச சபையின் தீர்மானங்களினாலும் புதிய பிரதேச சபைக்கான கட்டடம் அமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. முன்னைய கட்டடம் ஊரின் ஒதுக்குப் புறம்பான இடத்தில் இருப்பதால் இன்றைய ஊரின் நகர்வுக்கேற்ப ஹிஜ்றா சந்தியில் உள்ள பழைய கிராம சபைக் கட்டிட வளவு தெரிவு செய்யப்பட்டது. இவ்விடம் ஊரின் மத்தியில் உள்ளதால் பொருத்தமானதாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அரசாங்கத்தின் 'புறநெகும' திட்டத்தின் கீழ் 40 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு 2013.04.12ஆம் திகதி அடிக்கல் நடப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்டடத்தின் அடிக்கல் நடும் வைபவத்தில் பிரதம அதிதியாக கௌரவ உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எல்.எம். அதாவுல்லா (பா.உ) அவர்கள் கலந்து சிறப்பித்தார். அத்துடன் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் (கி.மா.உ) அவர்களும் எம்.எல்.ஏ. அமீர் TA கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அவர்களும் அம்பாரை மாவட்ட அப்போதய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜனாப் ஏ.ஜே. முஹம்மது இர்ஷாட் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

2017ல் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 20 மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யட்டனர் .அதில் மீண்டும் தவிசாளராக அல்ஹாஜ் ஏ.எம்.எம். நௌசாட் அவர்கள் தெரிவு செய்யப்பட்டு சிறப்பான முறையில் சம்மாந்துறை பிரதேச சபை நிர்வாகம் இயங்கி வருகின்றது.(நன்றி : "உள்ளூராட்சியும், மக்களும்" சம்மாந்துறை பிரதேசசபை வெளியீடு)

இங்குள்ள மக்களின் பிரதான தொழிலாக விவசாயம், மீன் பிடி, வியாபாரம், அரச தனியார் தொழில்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பவற்றை குறிப்பிட்டுக் கூறலாம். முஸ்லீம்கள் 88 வீதமும், தமிழர் 11 வீதமும் , ஏனையோர் 01 வீதமும் வாழும் இப்பிரதேசம் இன ஐக்கியத்துடன் வாழும் மக்களைக் கொண்டமைந்தது.

சபையின் பிரதான வருமானமாக மத்திய , மாகாண அரசாங்கங்களால் வழங்கப்படும் மாணியங்கள், ஆதனவரி, வியாபார உத்தரவுப்பத்திர வரி, முத்திரை வரி, நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் வாடகைக்கு விடல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கடந்த 27.03.2018 ஆந் திகதியிலிருந்து மக்கள் பிரதிநிதிகள் மூலம் புதிதான பிரதேச சபை சிறப்பாக இயங்கி வருகின்றது. ஆலோசனை சபை, அபிவிருத்திக் குழுக்கள், சனசமூக நிலையங்கள், மாகாண சபை உறுப்பினர், பிரதேச பாராளுமன்ற உறுப்பினர், பிரதேச செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, RDA, RDD என்பவர்களுடன் இணைத்து தமது செயற்பாடுகளை மேற்கொண்டது.

செயலாளர்,
சம்மாந்துறை பிரதேச சபை.



Scanned with CamScanner

இணைப்பு – 02

## தூரநோக்கு දැක්ම Vision

சம்மாந்துறையில் ஓர் நிலையான, பசுமை செழித்தோங்கும், பகிர்வு நோக்குடைய சமூகத்தை உருவாக்குதல்

සම්මාන්තුරේ හිදී ස්ථිර, සරුසාරවත්, බෙදා දීම අරමුණ කරගත් සමාජයක් පිහිටුවීම

**"Sammanthurai a Green Stable Thriving Community with a Shared Purpose"**

## எமது பணிகள் මෙහෙයුම Mission

பல் சமூகத்தைக் கொண்ட மார்க்கரீதியான பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஸ்தீரத்தன்மையான சனசமூக நிலையங்களை உருவாக்கி, மக்கள் பங்குபற்றுதலை ஊக்குவித்து, சூழலை பாதுகாத்தலுடன் அபிவிருத்தித் தேவைகளை இனங்காணுதல்

බහු සමාජයකින් යුත් ආගමික නියෝජිතයන් ඇතුළුවූ සවිමත් සමාජ මධ්‍යස්ථාන පිහිටුවා, ජනතා සහභාගිත්වය පොළඹවා, පරිසරය ආරක්ෂා කරන අතර සංවර්ධන අවශ්‍යතාවයන් හඳුනා ගැනීම

**Establish Strong Community centers inclusive of representatives of religious bodies, to protect environment and encourage participation in identifying of Development needs of the people**

## 1.2.Objective

- ❖ மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்தினூடாக மக்களால் முன் வைக்கப்பட்ட பிரச்சினைகளில் கனிசமான அளவு நிறைவேற்றல்.
- ❖ சிறந்த திண்மக் கழிவகற்றல் சேவையின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் தூய்மையான சூழலுக்கு வழிவகுத்தல்.
- ❖ கல்வி, சமூக, பொருளாதாரத் துறைகளின் முன்னேற்றத்திற்கு பக்கபலமாகச் செயற்படல்.
- ❖ சமூக கலாசார நடவடிக்கையை மேம்படுத்துவதற்கு சனசமூக நிலையங்களை உருவாக்கி, கட்டிட வசதிகளை வழங்குதல்.
- ❖ சுகாதார வசதிகளை மேம்படுத்துவதனூடாக அனைத்து தொற்று நோய் கட்டுப்பாட்டிற்கு உறுதுணையாயிருத்தல்.
- ❖ சகல சமுகங்களினதும் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்யக் கூடிய வழிவகைகளை ஏற்படுத்தல்.
- ❖ புதிய வருமான மூலங்களை அடையாளம் கண்டு வருமான அதிகரிப்பை ஏற்படுத்தி, அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- ❖ வாசிப்பின் மூலமாக வளமான எதிர்காலத்திற்கு வழிவகுத்தல்



Scanned with CamScanner

**இணைப்பு – 03**
**பிரதான தொழிற்பாடுகள்**

## Citizens Chart - பிரஜைகள் பிரகடனம்
## சம்மாந்துறை பிரதேச சபை

| இல | சேவைகள் | தேவையான ஆவணங்கள் | சேவை வழங்க எடுக்கும் காலம் | கட்டணங்கள் | பொறுப்பான உத்தியோகத்தர் | வேறு தேவைகள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ஆதன வரி செலுத்துதல் | வரி செலுத்த வேண்டிய வட்டாரம். வீதி, ஆதனவரி இலக்கம், முன்னர் ஆதன வரி செலுத்திய பற்றுச் சீட்டு | உடன் | வருடாந்தப் பெறுமதியில் 7% | வருமானப் பிரிவின் உத்தியோகத்தர் | |
| 02 | ஆதன வரி இடாப்பில் பெயர் மாற்றம் செய்தல் | பெயர் மாற்ற விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்தல், முன்னர் ஆதனவரி செலுத்திய பற்றுச் சீட்டை இணைத்தல், உறுதியினை பிரதியுடன் தேவையேற்படுமிடத்து காணியின் வரலாற்றுச் சான்றிதல் இணைத்தல் (பிரதிகளுடன்) | பெயர் மாற்றப் படிவம் ஒப்படைக்கப்படும் போது | விண்ணப்பப் படிவம் ஒன்று ரூபா. 100.00 பெயர் மாற்றக் கட்டணம் 1000.00 உடன் புதிய பெயர் ஆதன வரி இடாப்பில் சேர்ப்பதாயின் அதற்குரிய ஆதனவரிக் கட்டணமும் செலுத்த வேண்டும். | வருமானப் பிரிவின் உத்தியோகத்தர் | வருமானப் பரிசோதகர் அறிக்கை |
| 03 | ஆதன வரி சம்பந்தமான முறையீடு | முறையீடு தொடர்பான கடிதம் சான்று உறுதி ஆவனங்கள் (இருப்பின்) | விண்ணப்பிக்கும் போது | இல்லை | முறைப்பாட்டுப் பெட்டியில் இடுதல் அல்லது நேரடியாக நிர்வாகப் பிரிவில் ஒப்படைத்தல் | அனுப்பப்படும் கடிதங்கள் கௌரவ தவிசாளர் அல்லது செயலாளரின் பெயருக்கு முகரி இட்ட அனுப்புதல் |
| 04 | தெருவத்தாட்சிப் பத்திரம் பெறுதல் | தெருவத்தாட்சிப் பத்திரம் பெறும் விண்ணப்பக் கடிதம் முன்னர் ஆதனவரி செலுத்திய பற்றுச் சீட்டு அல்லது திண்மக்கழிவு செலுத்திய பற்றுச்சீட்டு, நில அளவைப்படப் பிரதி, காணியின் உறுதி அல்லது பேமிட் அவற்றின் புகைப்படம் பிரதிகள் என்பவற்றை ஒப்படைத்தல் | விண்ணப்பிக்கும் போது | தற்போதைய ஆதனவரி நிலுவையுடன் அல்லது திண்மக்கழிவுக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் தெருவத்தாட்சிப் பத்திரக் கட்டணமாக ரூபா. 1000.00 செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளல் | வருமானப் பிரிவில் உள்ள உத்தியோகத்தர், திட்டமிடல் பிரிவில் உள்ள உத்தியோகத்தர் | தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை, வீதியோரச் சான்றிதழ் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 05 | நீர் இணைப்பு ஒன்றை வழங்கும் போது வீதியில் அகழி வெட்ட அனுமதி வழங்கல் | தேசிய நீர் வழங்கல் வடிகல் அமைப்புச் சபையினால் வழங்கப்படும் நீர் இணைப்புக் கடிதம் முன்னர் ஆதனவரி செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது திண்மக்கழிவு க் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு உறுதியின் அல்லது பேமிட்டின் பிரதி (இல்லாதவிடத்து வதிவிடத்தை உறுதிப்படுத்திய கிராம சேவையாளரின் கடிதம் மற்றும் தேவை ஏற்படின் சொத்து உரிமையாளரின் சம்மதக் கடிதம் | உடன் | நீரிணைப்புத் தூரத்திற்கும், பாதையின் தன்மைக்கும் ஏற்பவும் கட்டணங்கள் வேறுபடும் (உ.ம் 05 அடிக்கு உட்பட்டவைகளுக்கு ரூபா. 575.00 உடன் இதற்கு மேலான ஒவ்வொரு அடிக்கும் 100.00 தார், கொங்றீட் வீதிகளுக்கு 1 சதுர அடிக்கு ரூபா. 1000.00 வைப்பாக அறவிடப்படும் | வருமானப் பிரிவில் உள்ள உத்தியோகத்தர் | வடிகான்கள் அகழப்படும் சந்தர்பத்தில் வைப்புப் பணம் செலுத்துதல். நீரிணைப்பின் பின்னர் தொழிநுட்ப உத்தியோகதர் அறிக்கையின்படி சேதம் இல்லாதவிடத்து வைப்பை மீளப்பெற்றுக் கொள்ளலாம் |
| .06 | நீர் தாங்கி வாடகைக்கு விடல் | நீர் தேவைப்படும் இடத்தை சுட்டிக் காட்டும் விண்ணப்பக்கடிதம் | தேவைப்படும் தினத்திற்கு முன்னர் சமர்பித்தல் | சம்மாந்துறை பிரதேசத்திற்குள் 8000 L - 6000.00<br>6000 L - 5000.00<br>4000 L - 3000.00<br>சம்மாந்துறை பிரதேசத்திற்கு அப்பால் வேறு கட்டணம் அறவிடப்படும் | வருமானப் பிரிவில் உள்ள உத்தியோகத்தர் | தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை |
| 07 | மோட்டர் கிரேடர் வாடகைக்குப் பெறல் | எழுத்து மூல விண்ணப்பங்கள் | தேவைப்படும் தினத்திற்கு முன்னர் சமர்பித்தல் | சம்மாந்துறை பிரதேசத்திற்குள் ஒரு மணித்தயாலயததிற்கு 4600.00 | வருமானப் பிரிவில் உள்ள உத்தியோகத்தர் | தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை |
| 08 | முறைப்பாடுகள் | தொடர்புடைய ஆவணங்கள் | தினமும் 8.30-4.00 | | நிர்வாகப் பிரிவு, திட்டமிடல் மற்றும் வருமானர் பிரிவு | முறைப்பாடுகள் நேரடியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும் |
| 09 | நூலக அங்கத்துவம் | நூலகத்தில் பெறப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் | தினமும் | விண்ணப்பம் - 20.00 அங்கத்துவ வைப்பு - 100.00 | நூலகர் | அரச இலட்சினையுள்ள (இறப்பர் முத்திரை) அரச உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் |




Scanned with CamScanner

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | திண்மக்கழிவு அகற்றல் (பொதுவழிகளில் மட்டும்) | | தினமும் நேர சுசியின் அடிப்படையில் | | தொழிநுட்ப உத்தியோகத்தர் | அகற்றப்பட வேண்டிய திண்மக்கழிவுகள் குடியிருப்பாளர்களால் பைகளில் இடப்பட்டு கழிவு அகற்றப்படும் தினங்களில் மட்டும் |
| 11 | தொல்லை தவிர்ப்பு | 1. முறைப்பாட்டுக் கடிதம்<br>2. தொடர்புடைய கடிதம் | பிரச்சினையின் தன்மைக்கேற்ப | | தொழிநுட்ப உத்தியோகத்தர் | |
| 12 | அப்துல் மஜீட் மண்டபம் (நகர மண்டப அனுமதி) | எழுத்து மூல விண்ணப்பம் | தேவைப்படும் தினத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் | திருமண வைபவத்திற்கு ஒரு நாளைக்கு ரூபா. 20,000.00, மணித்தியாலயத்திற்கு 2,000.00, வைப்பு 5,000.00 (Audio, Video 3,000.00, Multimedia ஒரு மணித்தியாலயத்திற்கு 1000.00) அறவிடப்படும் | வருமானப் பிரிவில் உள்ள உத்தியோகத்தர் | வருமானப் பிரிவில் உள்ள வருமானப் பரிசேதகர் அறிக்கையிடல் |
| 13 | கட்டட விண்ணப்பம் | பூர்த்தி செய்த விண்ணப்பம், உறுதி (பிரதி) நில அளவைப்படம் (பிரதி) தெருவத்தாட்சிப் பத்திரம், பிரதேச சபையினால் அனுமதி பெறப்பட்ட படவரைஞரால் வரையப்பட்ட கட்டடப் படம் 03 பிரதிகள்,பூரணப்படுத்தப்பட்ட கட்டட விண்ணப்பத்திற்கு தொழிநுட்ப உத்தியோகத்தர் அறிக்கையிடல் | பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கை, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தீர்மானத்தைப் பொறுத்து | விண்ணப்பத்திற்கு 800.00 விண்ணப்பத்தைப் பொறுத்து தளப்பரப்புக் கட்டணம் வேறுபடும். (காலநீடிப்புக்கு ஒரு வருடத்திற்கு 1000.00) | திட்டமிடல் பிரிவில் உள்ள உத்தியோகத்தர் | பற்றுச் சீட்டு வருமானப்பிரிவில் உள்ள உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளல். UDA யின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 14 | சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் | பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம், அயலவர் சம்மதக் கடிதம் உறுதியின் அல்லது போமிட்டின் பிரதி, அனுமதிக்கப்பட்ட கட்டட விண்ணப்பம், காணி உரிமையாளரின் சம்மதக் கடிதம், நில அளவைப்படம். | 03 வாரம் | சூழல் பாதுகாப்பு அனுமதிக்கட்டணம் 4000.00 உம் பரிசோதனைக் கட்டணம் 250,000.00 கீழ் 3000.00, 250,000.00 - 500,000.00 வரை 3750.00, 500,000.00 - 10,000,000.00 வரை 5000.00, 10,000,000.00 க்கு மேல் 10,000.00 | திட்டமிடல் பிரிவில் உள்ள உத்தியோகத்தர்கள், வருமானப் பிரிவில் உள்ள உத்தியோகத்தர்கள் | தொழிநுட்பக் குழுவினரின் அறிக்கை, CEA யின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15 | சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் | பூரணப்படுத்தப்பட்ட புதுப்பித்தல் விண்ணப்பப்படிவம், வியாபாரப் பத்திரச் சான்றிதழ் | 02 வாரம் | 4000.00 | திட்டமிடல் பிரிவில் உள்ள உத்தியோகத்தர்கள், வருமானப் பிரிவில் உள்ள உத்தியோகத்தர்கள் | தொழிநுட்பக் குழுவினரின் அறிக்கை, |
| 16 | JCB வாடகைக்கு பெறல் | தேவைப்படும் காலத்தை சுட்டிக்காட்டிய கடிதம் | உடன் | சம்மாந்தறை பிரதேசததிற்குள் ஒரு மணித்தயாலயத்திற்கு 4000.00 அறவிடப்படும் | வருமானப் பிரிவில் உள்ள உத்தியோகத்தர் | தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை |
| 17 | ரோலர் இயந்திரம் வாடகைக்குப் பெறல் | தேவைப்படும் காலத்தை சுட்டிக்காட்டிய கடிதம் | உடன் | சம்மாந்தறை பிரதேசததிற்குள் ஒரு நாளைக்கு 1 டொன் ரோலர் (4 hours) 16,000.00, மேலதிக ஒவ்வொரு மணித்தியாலயததிற்கும் 4000.00<br>ஒரு நாளைக்கு 3 டொன் ரோலர் (4 hours) 16,000.00, மேலதிக ஒவ்வொரு மணித்தியாலயததிற்கும் 3000.00 | வருமானப் பிரிவில் உள்ள உத்தியோகத்தர் | தொழிநுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை |
| 18 | பொது மைதானம் வாடகைக்குப் பெறல் | தேவைப்படும் காலத்தை சுட்டிக்காட்டிய கடிதம் செயலாளரின் அனுமதியுடன் | உடன் | விளையாட்டு நிகழ்ச்சிக்கு ஒரு நாளைக்கு 500.00, ஏனைய நிகழ்ச்சிக்கு 5000.00 வும், வைப்பு 3000.00 அறவிடப்படும் | வருமானப் பிரிவில் உள்ள உத்தியோகத்தர் | |

இணைப்பு – 04
நிறுவன வரைபடம்




Scanned by TapScanner
Scanned with CamScanner

**அத்தியாயம் 02**
**முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்**

விசேட அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகளை சுருக்கமாக விளக்குக

## 14. பிரதேச சபையினால் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் / விசேட செயற்பாடுகள்

எமது சம்மாந்துறை பிரதேச சபையினால் 2023 ஜனவரி தொடக்கம் 2023 டிசம்பர் வரை மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைள்

| தொ. இல | மாதம் | மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைள் | நிதி மூலம் |
|---|---|---|---|
| 01 | ஜனவரி | • ஜனவரி 02 - இவ்வருட வேலை ஆரம்பமும், சத்தியப் பிரமாண நிகழ்வும் கௌரவ தவிசாளரின் தலைமையில் தேசியக் கொடி ஏற்றலுடன் அலுவலக வளாகத்தில் உத்தியோகத்தர்கள், கௌரவ உறுப்பினர்கள் பங்கு பற்றலுடன் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது உயிர் நீத்த படை வீரர்களுக்கு 02 நிமிட அஞ்சலியும், பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டது.<br><br>• ஜனவரி 05 - சம்மாந்துறை பிரதேச சபையினால் கல்லரிச்சல் 01,02,03 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் ஊடறுத்துச் செல்லும் நீர் பசன வாய்கால் துப்பரவு செய்யும் வேலைத்திட்டம் நீர்பாசனதிணைக்களத்தின் ஒத்துழைப்புடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம்.நௌஷட் அவர்களின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டது.<br><br>• ஜனவரி 10 - சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் அவர்கள் தனது உறுப்பினர் மற்றும் தவிசாளர் பதவியை இராஜனாமா செய்வதற்கு முன்னர் பிரதேச சபையில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுடனான சந்திப்பு செயலாளர் தலைமையில் சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.<br><br>• சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.எம்.நௌஷட் அவர்கள் தனது உறுப்பினர் மற்றும் தவிசாளர் பதவியை இராஜினாமா செய்தமையினைத் தொடர்ந்து சபையின் உறுப்பினர்களான எம்.எஸ்.சரீபா, ஏ.சீ.எம்.சஹீல், எம்.ரீ.பௌசுள்ளாஹ், கே.எம்.இன்பவதி, என்.கோவிந்தசாமி, கே.குலமணி, ஆர்.வளர்மதி ஆகியோர் தமது பதவிகளை இராஜினாமா செய்தனர்.<br><br>• ஜனவரி 25 - 2023ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றம் பெற்று சம்மாந்துறை பிரதேச சபைக்கு வருகை தந்த உத்தியோகத்தர்களை வரவேற்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட் அவர்களின் தலைமையில் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்றது. | சபை மற்றும் ஏனைய அமைச்சுக்களின் நிதி |

| | | | |
|---|---|---|---|
| | | • ஜனவரி 26 - எமது பிரதேச சபை ஊழியர்களினால் சதக்கர் லேன், செந்நெல் கிராமம் -02 வீதி ஆகிய வடிகான்களின் ஒரு பகுதி முழுமையாக சுத்தம் செய்யப்பட்டது.<br><br>• ஜனவரி 31 - அம்பாரை மாவட்ட மற்றும் சம்மாந்துறை பிரதேசத்தின் பட்டின சபை அது தொடர்பான ஆவனங்கள் அமீர் அலி பொது நூலகத்தின் ஆவண காப்பகத்தில் பொது மக்கள் பார்வையிடுவதற்காக செயலாளர் அவர்களினால் நூலகரிடம் கையளிக்கப்பட்டது.<br><br>• ஆதன வரியாக ரூபா 1,322,758.47, வியாபார உரிமைக் கட்டணமாக ரூபா 393,000.00 ம் அறவீடு செய்யப்பட்டது.<br><br>• பொது மக்களிடமிருந்து 13 முறைப்பாடுகள் கிடைத்து 17 இற்குத் தீர்வு வழங்கப்பட்டது. | |
| 02 | பெப்ரவரி | • பெப்ரவரி 4 - இலங்கையின் 75வது தேசிய சுதந்திர தினத்தையொட்டி சம்மாந்துறை பிரதேச சபை ஏற்பாடு செய்த சுதந்திர தின நிகழ்வு ஸலாம் ஜும்மா பள்ளிவாசல் வளாகத்தில் சபையின் செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட் தலைமையில் சிறப்பாக இன்று இடம்பெற்றது. இதன்போது மர நடுகை வேலைத்திட்டம் மற்றும் மையவாடி வளாகத்தில் சிரமதானமும் இடம்பெற்றது.<br><br>• பெப்ரவரி 14 - சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் இராஜினாமா செய்தமையினால் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான விசேட அமர்வு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தலைமையில் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. அதன் பிரகாரம் அமர்வில் பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் பெயர் மாத்திரமே தவிசாளர் பதவிக்காக முன்மொழியப்பட்டது. கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் அவர்களினால் ஏகமனதாக சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளராக ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் பெயரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதில் அம்பாரை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ.கமல் நெத்மினி, கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் புலனாய்வு உத்தியோகத்தர் (விசேட தரம்) என்.ஐங்கரன், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட், உதவித் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட், பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்<br><br>• சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் சம்மாந்துறை பிரதேச சபையின் கீழுள்ள ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிட தொகுதியின் தேவைகளையும், குறைபாடுகளையும் கண்டறிவதற்கான விஜயத்தினை மேற்கொண்டார்.<br><br>• சம்மாந்துறை பிரதேச சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் | சபை நிதி |

| | | | |
|---|---|---|---|
| | | சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் தலைமையில் பிரதான அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. | |
| | | • மழை காலங்களில் வெள்ளத்தடுப்பை மேற்கொள்ளும் நோக்கில் மதீனா உம்மா வீதி வடிகானில் நிரம்பியுள்ள மணக்ளை கனரக இயந்திரம் (JCB) மூலமாக அகற்றும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனை சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார் | சபை நிதி |
| | | • சம்மாந்துறை பிரதேச சபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்தினை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டார். | |
| | | • பெப்ரவரி 17 - ஹிஜ்றா பொதுச்சந்தை எமது பிரதேச சபை ஊழியர்களினால் சுத்தம் செயயப்பட்டது. | |
| | பெப்ரவரி | • வீதியோரம் மீன் வியாபாரம் செய்து வருபவர்கள் மீண்டும் ஹிஜ்றா சந்தைக்குள் மீன் வியாபாரத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்காக வீதியோர வியாபாரிகளுடான கலந்துரையாடல் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் தலைமையில் பிரதான கேட்போர் கூடத்தில் இன்று நடைபெற்றது. | |
| | | • சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் சம்மாந்துறை கிரிக்கெட் சம்மேளனத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கமைய புதிதாக ஆலையடி வட்டை பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட பொது மைதானத்தினை பார்வையிட்டார். | |
| | | • வளத்தாப்பிட்டி மக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கடந்த 15ஆம் திகதி விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய 16ஆம் திகதி சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் குறித்த இடத்திற்கு விஜயம் செய்து மக்களின் குறைபாடுகளை கேட்டறிந்துகொண்டதுடன் 19ஆம் திகதி பிரதேச மக்களின் பங்களிப்புடன் பிரதேச சபையின் கனரக வாகனங்களினால் மைதானத்தை சுற்றியுள்ள மரங்கள், புதர்களை மற்றும் சிறுவர் பூங்கா, பாதைகள், உள்ளிட்ட சுற்றுச் சூழலில் சிரமதானம் செய்யப்பட்டது. | |
| | | • அம்பாரை 12ஆம் வீதியிலுள்ள பொது மக்களினால் வடிகான் பிரச்சினை தொடர்பாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் குறித்த இடத்திற்கு கள விஜயம் செய்து மக்களின் குறைபாடுகளையும் கேட்டறிந்துகொண்டார். இதில் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் ஏ.எச்.அன்வர் (றமீஸ்), சம்மாந்துறை பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.எம்.எம்.முஸ்தபா இதன்போது விஜயம் செய்தனர். | |
| | | • பெப்ரவரி 21 - சம்மாந்துறை பிரதேச சபையின் 59ஆவது மாதாந்த | |

| | | | |
|---|---|---|---|
| | பெப்ரவரி | அமர்வு சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்ற போது.<br>• சம்மாந்துறை முகைதீன் மாவத்தை ஹிஜ்றா 03ம் வீதியிலுள்ள பொது மக்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை குறித்த இடத்திற்கு விஜயம் செய்து மக்களின் குறைபாடுகளை கேட்டறிந்துகொண்டார்.<br>• பெப்ரவரி 22 - சம்மாந்துறை பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் புதிய உறுப்பினர்களாக ஏ.எச்.முஹம்மட் ஹாலித், எஸ்.ராஜஸ்வரி ஆகியோர்கள் சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் முன்னிலையில் தவிசாளர் அலுவலகத்தில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார்கள்.<br>• பெப்ரவரி 22 - சம்மாந்துறை பிரதேச சபையின் கடந்த வருடத்தின் நான்காவது மற்றும் இவ்வருடத்தின் முதலாவது காலாண்டுகளுக்கான கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் சபை செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட் அவர்களினால் கடந்த கால கணக்காய்வு முன்னேற்றம் தொடர்பான கருத்துக்களும் முன்வைக்கப்பட்டது.<br>• பெப்ரவரி 24 - சம்மாந்துறை பிரதேச சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் புதிய உறுப்பினராக பீ.எம்.மீராமுகைதீன் (ரியாழ்) பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார்.<br>• சம்மாந்துறை பிரதேச சபையின் கீழுள்ள நூலகங்கள் இணைந்து ஏற்பாடு செய்த அறிவாந்த சமூகத்திற்கான வாசிப்பு எனும் தொனிப்பொருளில் தேசிய வாசிப்பு மாதத்தின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று புதன்கிழமை அலுவலக பிரதான கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.<br>• சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களுக்கும், முன்னாள் தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் அவர்களுக்குமிடையிலான சினேகபூர்வ சந்திப்பு தவிசாளர் அலுவலகத்தில் இன்று இடம்பெற்றது. இதில் சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட், பிரதேச சபை உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் ஆகியோர்களும் கலந்துகொண்டனர்.<br>• ஆதன வரியாக ரூபா 887,325.62, வியாபார உரிமைக்கட்டணமாக ரூபா 268,000.00 ம் அறவீடு செய்யப்பட்டது.<br>• பொது மக்களிடமிருந்து 17 முறைப்பாடுகள் கிடைத்து 17 இற்குத் தீர்வு வழங்கப்பட்டது. | |

| | | | |
|---|---|---|---|
| 03 | மார்ச் | • சம்மாந்துறை பிரதேசத்தில் யானைகளினால் ஏற்படும் பிரச்சினைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான அவசர கலந்துரையாடல் அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் சம்மாந்துறை பிரதேச சபை கௌரவ தவிசாளர் சம்மாந்துறை பிரதேச செயலாளர் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் பிரசாந்த, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.<br><br>• உள்ளூர் அபிவிருத்தி உதவி திட்டத்தின் (LDSP) கீழ் சம்மாந்துறை பிரதேச சபையினால் வீரமுனை பிரதேசத்தில் புதிதாக அபிவிருத்தி செய்யப்படும் சிறுவர் பூங்காவை சம்மாந்துறை பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். இதில் சபையின் செயலாளர் மற்றும் உறுப்பினர்களுக் கலந்து கொண்டனர். | |
| | மார்ச் | • சென்னல் கிராமம் உம்றா பள்ளிவாசலினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய மக்களின் குறைபாடுகளை கண்டறிவதற்காக சம்மாந்துறை பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் அங்கு விஜயம் செய்தார்.<br><br>• சம்மாந்துறை பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களுக்கும் சம்மாந்துறைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பீ.எச்.செனவிரட்ன அவர்களுக்கும் இடையிலான சினேகபூர்வ சந்திப்பு இன்று இடம்பெற்றது.<br><br>• மஜீட்புரம் மக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் குறித்த இடத்திற்கு விஜயம் செய்து மக்களின் குறைபாடுகளை கேட்டறிந்துகொண்டதுடன், பிரதேச மக்களின் பங்களிப்புடன் பிரதேச சபையின் கனரக வாகனங்களினால் பாதைகள், உள்ளிட்ட சுற்றுச் சூழலில் சிரமதானம் செய்யப்பட்டதுடன் வீதிகளுக்கு தொகுதி மின் விளக்கு பொருத்தப்பட்டது.<br><br>• சென்னல் கிராமம் அறபா பள்ளிவாசல் பிரதேசத்தில் கல்குவாரியினால் உருவான ஆழமான குட்டை தொடர்பான கலந்துரையாடல் கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் தலைமையில் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.<br><br>• வீதியோர மீன் வியாபாரிகளை ஹிஜ்றா பொதுச்சந்தையினுள் மீன் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு மீன் சந்தை வர்ணம் பூசப்பட்டு அழகுபடுத்தப்பட்டு விற்பனை இடங்கள் விஸ்தரிக்கப்பட்டும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. | சபை நிதி |

| | | | |
|---|---|---|---|
| | மார்ச் | • பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களுக்கும் மல்வத்தை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ரத்தன மல அவர்களுக்கும் இடையிலான சினேகபூர்வ சந்திப்பு தவிசாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.<br><br>• சம்மாந்துறை ஹிஜ்றா புரத்திலுள்ள மக்களின் குடி நீர் பிரச்சினை உள்ளிட்ட அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உயர் அதிகாரிகளுடன் குறித்த இடத்திற்கு செய்து மக்களின் குறைபாடுகளை கேட்டறிந்துகொண்டனர்.<br><br>• மார்ச் - 09 சம்மாந்துறை பிரதேச சபையின் 60ஆவது மாதாந்த அமர்வு சம்மாந்துறை பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.<br><br>• சம்மாந்துறை பிரதேச சபையின் கீழுள்ள சனசமூக நிலைய உறுப்பினர்களுடான கலந்துரையாடல் சபையின் கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் தலைமையில் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பெருளாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.<br><br>• பிரதேச சபையினால் பராமரிக்கப்படும் விலங்கறுமனை இறைச்சிக்காக மாடு அறுக்கின்ற போது ஏற்பாடும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் சபையின் கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் தலைமையில் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி, கால்நடை வைத்திய அதிகாரி பிரதேச சபையின் செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.<br><br>• சம்மாந்துறை தைக்கப் பள்ளிவாசல் தெற்கு வீதி திறத்தல் தொடர்பான கலந்துரையாடல் சம்மாந்துறை பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களின் தலைமையில் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.<br><br>• சம்மாந்துறை மலையடிக்கிராமம் - 01 கிராமசேவகர் பிரிவிலுள்ள உப்புரி வீதி குன்றும், குழியுமாக மலைக்கற்கள் காணப்படுவதனால் பயணிப்பதில் சிரமமாகவுள்ளதாக பிரதேச மக்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய இன்று வியாழக்கிழமை பிரதேச சபையின் கனரக வாகனத்தினால் இவ் வீதி சீர்செய்யப்பட்டது.<br><br>• மார்ச் 21- உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடிவடைந்தமையால் கலைக்கப்பட்ட கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கும் விசேட கூட்டம் | |

| | | | |
|---|---|---|---|
| | | கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அநுராதா யஹம்பத் தலைமையில் திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.<br><br>• சம்மாந்துறையில் புனித நோன்பு காலத்தில் சிற்றூண்டிகளின் விலை மற்றும் உணவுகளின் தரம், பாதுகாப்பு தொடர்பாக தேனீர்சாலை உரிமையாளர்களுடான கலந்துரையாடல் சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் தலைமையில் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.<br><br>• சம்மாந்துறை ஹிஜ்றா புரத்திலுள்ள மக்களின் குடி நீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை பிரதேச சபையினால் தற்காலிகமாக குடிநீர் வழங்க முன்னாள் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தொடராக குறித்த இடத்திற்கு சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.வீ.எம்.ஜெசீருடன் இன்று நேரில் விஜயம் செய்து பார்வையிட்டார்.<br><br>• ஆதன வரியாக ரூபா 1,464,987.99 வியாபார உரிமைக்கட்டணமாக ரூபா 318,000.00 ம் அறவீடு செய்யப்பட்டது.<br><br>• பொது மக்களிடமிருந்து 79 முறைப்பாடுகள் கிடைத்து 79 இற்குத் தீர்வு வழங்கப்பட்டது. | |
| 04 | ஏப்ரல் | • சம்மாந்துறை ஹிஜ்றா புரத்திலுள்ள மக்களுக்கு தற்காலிகமாக குடிநீர் வழங்கும் வேலைத்திட்டம் சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் நேரடி கண்காணிப்பில் வழங்கப்பட்டது.<br><br>• சும்மாந்துறை பிரதேச சபையின் அனுசரனையுடன் வளத்தாப்பிட்டி நாவலர் சனசமூக நிலையம் வீனஸ் விளையாட்டுக் கழகமும் வளத்தாப்பிட்டி பொது மக்களும் இணைந்து தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டுப் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்வின் கௌரவ அதிதியாக பிரதேச சபையின் செயலாளர் எம்.'.ஏ.கே.முஹம்மட் கலந்து கொண்டார்.<br><br>• விவசாய அமைச்சின் வழிகாட்டலில் தமிழ் சிங்கள புத்தாண்டு சுப நேரத்தில் தேசத்திற்கு மூச்சைக் கொடுக்கும் தேசிய மர நடுகை வேலைத்திட்டம் இன்றைய தினம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைய பிரதேச சபையினால் ஏற்பாடு செய்த பலன் தரும் மரக்கன்று நடும் வேலைத்திட்டம் சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.<br><br>• சம்மாந்துறை பிரதேச சபையினால் பிரதேசத்தின் திறந்த வாசிப்பு நிலைய செயற்திட்டத்தினை முன்னோடியாக செயற்படுத்துவதற்கு | சபை நிதி<br><br>சபை நிதி |



Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| | | பிரதேச சபைக்கு முன்பாகவுள்ள ஹிஜ்றா ஜும்ஆ பள்ளிவாசலின் அருகாமையிலுள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் திறந்த வாசிப்பு மையத்தினை சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.<br><br>• சபையும், ஆசிய பௌண்டஷன் இணைந்து நாடாத்தும் சிறுவர்களுக்கான கதை சொல்லும் நேரம் Zoom தொழில் நுட்பத்தின் ஊடக சம்மாந்துறை பிரதேச சபையின் கீழுள்ள அமீர் அலி பொது நூலகத்தின் சிறுவர் பிரிவில் இடம்பெற்றது.<br><br>• சம்மாந்துறை பிரதேசத்தில் வாழ்வாதார உதவிகளை பெற்ற பயனாளிகளுக்கு வியாபார உத்தரவு பத்திரம் வழங்குவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு இஸ்லாமிக் றிலீப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சம்மாந்துறை பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் சம்மாந்துறை கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது வியாபாரத்திற்கான உத்தரவு பத்திரம் பெறுவதன் அவசியம் மற்றும் முக்கியத்துவம், அதன் நன்மைகள், வியாபார உத்தரவு பத்திரம் பெறுவதற்கான தேவையான ஆவணங்கள் தொடர்பாக சம்மாந்துறை பிரதேச சபையின் வருமானப் பரிசோதகர் எஸ்.ஏ.எச்.எஸ்.யஹியா அவர்களினால் பயனாளிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.<br><br>• ஏப்ரில் 28 - சர்வதேச புத்தக தினத்தையொட்டி அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பொது நூலகங்களுக்கு ஆசியா பவுண்டேஷனின் அனுசரணையுடன் நூல்கள் கையளிக்கும் நிகழ்வு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி அவர்களின் தலைமையில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக கோட்போர் கூடத்தில் இடம்பெற்றது.<br><br>• ஆதன வரியாக ரூபா 561,064.57, வியாபார உரிமைக்கட்டணமாக ரூபா 66,250.00 ம் அறவீடு செய்யப்பட்டது.<br><br>• பொது மக்களிடமிருந்து 26 முறைப்பாடுகள் கிடைத்து 26 இற்குத் தீர்வு வழங்கப்பட்டது. | ஆசிய பவுண்டேசன் |
| 05 | மே | • சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சம்மாந்துறை மேசன் தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் சம்மாந்துறை பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் சிரமதானமும், மரநடுகையும் கைர் ஜுஆப் பள்ளிவாசல் மையவடி வளாகத்தில் இடம்பெற்றது.<br><br>• எமது பிரதேச சபை ஊழியர்களினால் கல்முனை 4ம் வீதி வடிகானின் ஒரு பகுதி முழுமையாக சுத்தம் செய்யப்பட்டது.<br><br>• சம்மாந்துறை பிரதேச சபை மற்றும் ஹிஜ்ரா ஐக்கிய சமூக சேவைகள் ஒன்றியம் (Huswa) என்பவற்றின் அனுசரணையுடன் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்துடன் இணைந்து நடாத்தும் கா.பொ.த. சாதாரனதர (G .C.E.O/L) - 2022 மாணவர்களுக்கான இஸ்லாம் பாட மீட்டல் செயலமர்வு சம்மாந்துறை பிரதேச சபையின் | சபை நிதி<br><br>சபை நிதி |

| | | | |
|---|---|---|---|
| | | செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் தலைமையில் அப்துல் மஜீட் மண்டபத்தில் இடம்பெற்றது. பிரபல இஸ்லாம் பாட விரிவுரையாளர் அஷ்-ஷெய்க் ஏ.என்.எம்.ஜுனைட் நஸீர் (நளீமி) அவர்கள் விரிவுரை நிகழ்த்தினார். | |
| | | • மே 08 - சம்மாந்துறை பிரதேச சபையினால் வடமேற்கு அபிவிருத்தி அதிகார சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட CAT 2020 கணனி மென்பொருளை பயன்படுத்தி வருமான அறவீட்டிற்கான பரீட்சாத்த வேலைத்திட்டம் சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. | CDLG நிதி |
| | | • வடிகானில் கழிவு நீர் விடுவதாக மலையடிக்கிராமம் - 01, பிரதேச மக்களினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய மலையார் வீதியின் வடிகான் எமது பிரதேச சபை ஊழியர்களினால் சுத்தம் செய்யப்பட்டதுடன், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் இது தொடர்பான விழிப்புணர்வும் செய்யப்பட்டது. | |
| | | • மே 11 - உள்ளூர் மேம்பாட்டு ஆதரவு செயற்திட்டத்தின் (LDSP) நிதி ஒதுக்கீட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீரமுனை சிறுவர் பூங்கா திறப்பு விழா பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. அம்பாரை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ.கமல் நெத்மினி அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறுவர் பூங்காவினை திறந்து வைத்தார். இதில் LDSP திட்ட பொறியிலாளர் ஏ.எம்.சாஹிர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரும், திட்ட இணைப்பாளருமான எஸ்.ஏ.சி.எம்.வீ.மௌலானா, ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய செயலாளர், ஆலய நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். | LDSP நிதி |
| | மே | • மே 16 - டெங்கு கட்டுப்பாட்டு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைவாக சம்மாந்துறை பிரதேச சபையினால் டெங்கு ஒழிப்பு தினமாக இன்று பிரகடனம் செய்யப்பட்டு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. | சபை நிதி |
| | | • மே 16 - சம்மாந்துறை பிரதேச மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைக்களுக்காக நடமாடும் சேவை சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது. இதன் போது சம்மாந்துறை பிரதேச சபையின் கருமபீடம் அமைக்கப்பட்டு சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் தலைமையிலான பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மக்களுக்கு சேவை வழங்கினர்.ள | |

| | | | |
|---|---|---|---|
| | | • சம்மாந்துறை பிரதேசத்தில் இஸ்லாமிக் றிலீப் நிறுவனத்தினால் வாழ்வாதார உதவிகளை பெற்ற பயனாளிகளுக்கு வியாபார உத்தரவு பத்திரம் வழங்குவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு இஸ்லாமிக் றிலீப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சம்மாந்துறை பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் சம்மாந்துறை கலாச்சார மண்டபத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.<br>• தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு சம்மாந்துறை பிரதேச சபையினால் வீரமுனை சிறுவர் பூங்கா வளாகத்தில் ஏற்பாடு செய்த மர நடுகை நிகழ்வு சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் வழிகாட்டலில் இடம்பெற்றது.<br>• ஆதன வரியாக ரூபா 581,382.67, வியாபார உரிமைக் கட்டணமாக ரூபா 177,250.00 அறவீடு செய்யப்பட்டது.<br>• பொது மக்களிடமிருந்து 26 முறைப்பாடுகள் கிடைத்து 26 இற்குத் தீர்வு வழங்கப்பட்டது. | |
| 06 | ஜூன் | • தேசிய சுற்றாடல் வாரத்தின் சுற்றாடல் சுத்தப்படுத்துகை தினத்தையொட்டி சம்மாந்துறை பிரதேச சபையினால் சுவானியார் வடிகானின் ஒரு பகுதி சுத்தப்படுத்தியதுடன் அவ் பிரதேசத்திலுள்ள மக்களுக்கான விழிப்புணர்வு வேலைத்திட்டம் சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் வழிகாட்டலில் இடம்பெற்றது.<br>• உலக சுற்றாடல் தினத்தையொட்டி "பிளாஸ்ரிக் மாசுபாட்டுக்கு எதிராக செயற்படுவோம்" எனும் தொனிப்பொருளில் பிரதேச சபையினால் ஏற்பாடு செய்த விழிப்புணர்வு வேலைத்திட்டம் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் வழிகாட்டலில் இடம்பெற்றது.<br>• கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) தேசமாண்ய ஆதம்வாவா மன்சூரின் 39 வருட கால அரச சேவையை பாராட்டி கௌரவிக்கும் விழாவும், "மன்சூர் எனும் நிருவாக ஆளுமை" நூல் வெளியீடும் சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது பிரதேச சபையின் சார்பாக ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிட தொகுதியின் பொறுப்பாளர் ஏ.சலாம் மற்றும் சம்மாந்துறை பிரதேச சபையின் உத்தியோகத்தர் ஐ.எல்.எம்.சப்றி ஆகியோரினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.<br>• பிரதேச சபையின் ஊழியர்களால் சீனி விதானை வடிகான் சுத்தம் செய்யப்பட்டது.<br>• ஆதனவரியாக ரூபா. 386,591.71, வியாபார உரிமைக் கட்டணமாக ரூபா 158,500.00 ம் அறவீடு செய்யப்பட்டது.<br>• பொது மக்களிடமிருந்து 21 முறைப்பாடுகள் கிடைத்து 21 இற்குத் | சபை நிதி |



Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| | | தீர்வு வழங்கப்பட்டது. | |
| 07 | ஜுலை | • சென்னல் கிராமம் - 01ஐ சேர்ந்த ஐ.எம்.அறூஸ் அவர்களின் மறைந்த தாயாரின் ஞாபார்த்தமாக சம்மாந்துறை பிரதேச சபையின் ஜனாஸா வாகனத்திற்கு ஒரு இலட்சத்து பன்னிரெண்டாயிரம் ரூபாய் (112,000.00) பெறுதியான சந்தூக்கு மற்றும் ஜனாஸாவை ஏற்றுவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.<br>• பிரதேச சபையின் ஊழியாகளால் வீதிகள் வடிகான் சுத்தம் செய்யப்பட்டது.<br>• ஜுலை 19 - சம்மாந்துறை பிரதேச சபையினால் வடமேற்கு அபிவிருத்தி அதிகார சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட CAT 2020 கணனி மென்பொருளை பயன்படுத்தி இலகுவாகவும், விரைவாகவும் மக்களுக்கு சேவையை வழங்கும் நோக்குடன் வருமான அறவீட்டில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக கண்டறிய வடமேற்கு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் ஜகத் அதபத்து அவர்களின் தலைமையிலான தொழில்நுட்ப குழுவினர் சம்மாந்துறை பிரதேச சபைக்கு விஜயம் மேற்கொண்டனர்.<br>• ஆதன வரியாக ரூபா 538,983.31, வியாபார உரிமைக் கட்டணமாக ரூபா 249,000.00 ம் அறவீடு செய்யப்பட்டது.<br>• பொது மக்களிடமிருந்து 20 முறைப்பாடுகள் கிடைத்து 20 இற்குத் தீர்வு வழங்கப்பட்டது. | |
| 08 | ஆகஸ்ட் | • ஆகஸ்ட் கல்முனை பிராந்திய மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்திற்கு நாளாந்தம் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு மாத்திரை வழங்குவதற்காக சம்மாந்துறை பிரதேச சபையினால் 04ஆயிரம் மாத்திரை பக்கெட்கள் அன்பளிப்பு செய்யப்பட்டது.<br>• ஆகஸ்ட் 15 - தென்னை பயிர்ச்செய்கை சபையினால் ஸ்ரீ சம்பத் புதிய இல்லம் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இலவச தென்னை மரக்கன்று வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.<br>• பிரதேச சபையின் ஊழியாகளால் முகைதீன் மாவத்தை வீதியின் இரு மருங்கிலும் குப்பைகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.<br>• ஆகஸ்ட் எமது பிரதேச சபை ஊழியர்களினால் மதீனா உம்மா வீதி, ஹிஜ்றா 01ஆம் வீதி, மற்றும் M.P வீதி வடிகான்கனின் ஒரு பகுதி முழுமையாக சுத்தம் செய்யப்பட்டது.<br>• ஆதனவரியாக ரூபா. 559,157.01, வியாபார உரிமைக் கட்டணமாக ரூபா 205,500.00 ம் அறவீடு செய்யப்பட்டது. | சபை நதி |



Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| | | • பொது மக்களிடமிருந்து 40 முறைப்பாடுகள் கிடைத்து 40 இற்குத் தீர்வு வழங்கப்பட்டது. | |
